பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 30 | செவ்வாய்க்கிழமை | 11.02.2025 | அதிர்வு 193

## பாரதியின் மறைவு தமிழ்ச் சமூகத்துக்கு மிகப்பெரிய இழப்பு



### வடக்கு ஆளுநர் இரங்கல்

மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் இழப்பைத் தமிழ்ச் சமூகமும், ஊடகச் சமூகமும் ஆழமாக உணர்கின்றது என்று வடக்கு மாகாண 06




# நீதிமன்றத் தீர்ப்பு நாளை இரவுக்கு முன்னர்
# அதனை அறிவிக்க வெள்ளி விசேட அமர்வு
# பட்ஜட் அன்றே சட்டமூலம் நிறைவேற்றம்

# உள்ளூராட்சித் தேர்தல்கள் ஏப்ரல் 24இல் நடத்த முடிவு

### அவசர அவசரமாக காய்நகர்த்துகின்றது அரசு

உத்தேச உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை, தேர்தல் ஆணையம் வரும் ஏப்ரல் 24ஆம் திகதி நடத்துவதற்கான அறிவிப்பை விடுப்பதற்கு வசதி செய்யும் விதத்தில் அவசர அவசரமாகக் காய்களை நாடாளுமன்றத்தில் நகர்த்துகின்றது தேசிய மக்கள் சக்தி அரசு. 06

### திஸ்ஸ ராஜமகா விகாரைக் காணிகளை மீளக் கையளிக்கக் கோரி



# தையிட்டியில் இன்று போராட்டம் ஆரம்பம்

### பல்வேறு தரப்பினரும் ஆதரவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டி திஸ்ஸ ராஜமகா விகாரை அமைந்துள்ள மற்றும் அதனைச்சூழவுள்ள தமது காணிகளை மீளக் கையளிக்கக்கோரி காணி உரிமையாளர்கள் இன்று 06




இலங்கைக்கும் மந்திகளுக்கும் இடையிலான தொடர்பு புராண காலம் வரை நீண்டது.

இராமாயணத்தின்படி, சீதையைத் தேடி வந்த அனுமன் இலங்கையை தீயிட்டமையோடு இந்தக் கணக்குத் தொடங்குகின்றது.

இராம படைகள் இலங்கைக்கு வருவதற்கு சேது சமுத்திரத்தில் பாலம் அமைத்தவர்களில் மந்திகளுக்கும் பங்கு உண்டு.

இந்திய அமைதி காக்கும்(?) படைகள் இலங்கைக்கு வந்து, வடக்கு – கிழக்கில் தமது இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தபோது அச்சமயத்தில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த 'முரசொலி' பத்திரிகையின் அச்சு இயந்திரத்திற்கும் குண்டு வைத்தார்கள். அப்பத்திரிகையின் ஆசிரியர் எஸ்.திருச்செல்வத்தை (இப்போது கனடாவில் வசிக்கின்றார்) கைது செய்தனர்.

யாழ் கோட்டையில் சிறை வைக்கப்பட்ட திருச்செல்வம் சிறிது காலத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டார். அவரை அவரது இல்லத்துக்கு அழைத்து வந்து விடுவித்த மூன்று இந்திய 06

# தையிட்டி விகாரையை இடிப்பதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவே முடியாது

## யாழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

"யாழ். தையிட்டி விகாரையை உடைப்பதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு வருமா என்பது கேள்விக்குறியே. ஆகவே, சுமுகமான தீர்வை எட்ட வேண்டுமே தவிர மீண்டும் இனவாதத்தையும் மதவாதத்தையும் வளர்க்கக்கூடிய நடவடிக்கையை முன்னெடுக்கக் கூடாது."

– இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்ற பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்களுடைய விருப்பம் என்னவென்பதை நாங்கள் பார்க்க வேண்டும். அந்தவகையில் பன்சல கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது. அதில் பூஜை வழிபாடுகளும் தொடர்கின்றன. அன்றைய தினம் பேசாதவர்கள், நடவடிக்கை எடுக்காதவர்கள் இன்றைக்கு இதனைப் பூதாகரமான பிரச்சினையாக மாற்றுவதற்கு முயல்கின்றனர்.

உண்மையிலேயே இதனை இதயசுத்தியுடன் செய்கின்றார்களா அல்லது எதிர்வரும் நாட்களில் இவர்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இதனைத் துருப்புச்சீட்டாகப் பயன்படுத்த முயல்கின்றார்களா என்ற கேள்வி எழுகின்றது.

மீண்டும் இனவாதத்தைத் தூண்ட முடியாது. இனவாதத்தைப் பயன்படுத்தி இலங்கையைப் பிளவுபடுத்த முடியாது. நாட்டின் அபிவிருத்தியைப் பற்றி பேச முடியாது. அபிவிருத்தி துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நிலையில் அவர்கள் இனவாத, மதவாதத்தைத் தூண்டி மீண்டும் தங்களை நிலைநாட்டிக்கொள்ள சிலர் முயல்கின்றனர். எங்கள் அரசின் கீழ் இந்தப் போராட்டங்கள் இடம்பெறுகின்றன.

இந்தப் பிரச்சினைக்கு நாங்கள் மக்களோடு கலந்துரையாடி தீர்வை எட்ட முயல்கின்றோம்.

விகாரை சட்டவிரோதமா அல்லது சட்ட ரீதியானதா என்பதை வாதங்களாகத் தனித்தனியான கருத்துக்களைச் சொல்ல முடியும். விகாரை அமைக்கப்பட்ட இடம் மக்களுடைய இடம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அந்தவகையில் நிச்சயமாக அந்த மக்களுக்கு அதற்குரிய நட்டஈடு மற்றும் மாற்றுக் காணிகளை வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது.

விகாரையை உடைப்பதன் மூலம் தையிட்டிப் பிரச்சினைக்குத் தீர்வு வருமா என்பது கேள்விக்குறியே. ஆகவே, சுமுகமான தீர்வை எட்ட வேண்டுமே தவிர மீண்டும் இனவாதத்தையும் மதவாதத்தையும் வளர்க்கக்கூடிய நடவடிக்கையை முன்னெடுக்கக் கூடாது." – என்றார்.

# 4 நாள்களில் இயல்பு நிலைக்கு திரும்பும் நுரைச்சோலை அனல் மின் நிலையம்



நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையம் அடுத்த வெள்ளிக்கிழமை மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதை மீண்டும் இணைப்பதற்குத் தேவையான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

அதன்படி, நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையம் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.




# தையிட்டி போராட்டத்துக்கு அணிதிரளுமாறு அழைப்பு

**வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் அறிக்கை**

(எஸ்.நிதர்ஷன்)

தையிட்டி விகாரைக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் போராட்டத்துக்கு வடக்கு. கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

யாழ். தையிட்டியில் பொதுமக்களின் காணிகளுக்குள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக இன்று மாலை போராட்டம் ஆரம்பமாகின்றது.

அந்த விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்துக்குப் பல்வேறு அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் தமது ஆதரவை வெளிப்படுத்தி இருக்கின்றன.

இந்நிலையில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கமும் தமது முழுமையான ஆதரவைத் தெரிவிப்பதாக சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

“தமிழ் மக்கள் தமது ஒவ்வொரு பிரச்சினைக்கு எதிராகவும் தொடர்ந்து போராடிக் கொண்டே வருகின்றனர். அந்த வகையில் தமது காணியை விடுவிக்க கோரி மக்கள் பாரிய போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

ஆகையினால் இந்தப் போராட்டத்தில் கட்சி பேதங்களை விடுத்து அனைத்து அரசியல் கட்சிகளும், பொது அமைப்புக்களும் அணிதிரள வேண்டும்.” – என்றும் அவர் அறிக்கை ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நிதி தூய்தாக்கல், பயங்கரவாதத்திற்கான நிதி பங்களிப்பை தடுக்க புதிய செயலணி



நிதி தூய்தாக்கல், பயங்கரவாதத்திற்கான நிதி பங்களிப்பை தடுப்பதற்கான செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் புவனேக அலுவிகார தலைமையில் இந்த செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த செயலணியின் ஏனைய உறுப்பினர்களாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார, தொழில் மற்றும் பொருளாதார பிரதியமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி திட்டமிடல் பிரதியமைச்சர் ஹர்சன சூரியப்பெரும உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநர் நெலுமினி தவுலகல, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் ஏ.கே.டி.டி.டி. அரந்தரவும் செயலணியில் அங்கம் வகிக்கின்றனர்.

# தையிட்டி விகாரை உடனடியாக அகற்றப்பட்டே ஆக வேண்டும்!

## ஏனைய கட்சிகளும் போராட முன்வந்தமைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வரவேற்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுவதற்கு ஏனைய கட்சிகளும் ஆதர வளிக்க முன்வந்திருப்பது நல்ல விடயம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை தையிட்டி விகாரைக்கு முன்பாக காணி உரிமையாளர்களின் ஏற்பாட்டில் போராட்டம் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சட்டவிரோதமாக விகாரையைக் கட்ட ஆரம்பிப்பதற்கு அடிக்கல் நாட்டிய உடனேயே இது சம்பந்தமாக நாங்கள் கேள்விப்பட்டு அந்த வேலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏக மனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இராணுவத் தளபதியும் கலந்துகொண்டிருந்தார். இராணுவமே இந்தச் சட்டவிரோத செயற்பாட்டைச் செய்தது.

ஆகவே, அந்தக் கட்டடம் கட்டி இருக்கக்கூடாது. எந்த அனுமதியும் எடுக்காமல் குறித்த விகாரை சட்டவிரோதமாகத் தனியார் காணியில் கட்டப்பட்டுள்ளது.

ஆகவே, குறித்த சட்டவிரோதக் கட்டடம் உடனடியாக அகற்றப்பட வேண்டும். அதற்காக நாங்கள் தொடர்ந்து போராடி வருகின்றோம். இந்நிலையில், ஏனைய கட்சிகளும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளமை சிறந்த விடயம்.” – என்றார்.

# மாபெரும் சர்வதேச மாநாடு 20, 21 இல் கொழும்பில் ஆரம்பம்

உலகின் 50 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் மாபெரும் சர்வதேச மாநாடு இன்னும் சில நாள்களில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

'Innovation Island Sri Lanka” எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் பெப்ரவரி 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் குறித்த மாநாடு நடைபெறவுள்ளது.

இலங்கையை உலகளாவிய புத்தாக்க கேந்திரமாக மாற்றும் நோக்கில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் 50 நாடுகளின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பல்வேறு துறைகளிலுள்ள உயர்மட்ட வல்லுநர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.



# மாவையின் மரணத்துக்கு நாங்கள்தான் காரணம் என்று திட்டமிட்டு விஷமப் பிரசாரம்

## சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை என்கிறார் சி.வி.கே.

(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரணத்துக்கு நாங்கள்தான் காரணம் என்றவாறாகத் திட்டமிட்டு விஷமப் பிரசாரங்கள் பரப்பப்பட்டு இருக்கின்றன. இதன் உண்மையை எமது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். கல்வியங்காட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் இறுதிச் சடங்கில் விஷமப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், இறுதி நிகழ்வில் குழப்பங்கள் ஏற்படக்கூடாது என்பதற்காக அதற்கான பதிலை வழங்குவதை நாங்கள் தவிர்த்து இருந்தோம்.

ஆனாலும், சில விடயங்களை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அது எங்களுடைய பொறுப்பு. உண்மையை மக்களும் அறிந்துகொள்ள வேண்டிய தேவையும் இருக்கின்றது.

குறிப்பாக நானும் பதில் செயலாளர் சத்தியலிங்கமும் மாவை சேனாதிராஜாவின் வீட்டுக்குச் சென்று சந்தித்து சுகயீனம் தொடர்பிலே கலந்துரையாடியிருந்தோம்.

ஆனால், நாங்கள் அரசியல் பேசியதாகவும், கடுந் தொனியில் கதைத்திருந்ததாகவும் சிவமோகன் மற்றும் சசிகலா ரவிராஜ் ஆகியோர் கூறியிருப்பது முற்றிலும் பொய்யானது. அது அவர்களின் கற்பனைவாதங்களே தவிர வேறொன்றும் இல்லை.

ஆனாலும், மாவை சேனாதிராஜாவின் மரணத்துக்கு நாங்கள்தான் காரணம் என்றவாறாகத் திட்டமிட்டு விஷமப் பிரசாரங்கள் பரப்பப்பட்டு இருக்கின்றன. இதன் உண்மையை எமது மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதன் பின்னர் வைத்தியசாலையில் நானும் குலநாயகமும் மாவை சேனாதிராஜாவைச் சென்று பார்வையிட்டு இருந்தோம். அதன் பின்னர் நாங்கள் வருகின்றபோது மாவை சேனாராஜாவின் சகோதரி குலநாயகத்துடன் முரண்பட்டுள்ளார்.

ஆனால், மாவை சேனாதிராஜா இருப்பதற்குத் தனது வீட்டைக் கொடுத்தும், மாவை சேனாதிராஜா தாக்குதலில் காயமடைந்த பின்னர் அவரைப் பராமரித்ததும் குலநாயகம் தான். உண்மையில் மாவைக்கும் குலநாயகத்துக்கும் இடையே குடும்ப உறவு முறை இருந்தது.

ஆனால், மாவையின் சகோதரியின் பேச்சால் மனமுடைந்த குலநாயகம் இறுதிச்சடங்கில் கூடக் கலந்துகொள்ளாமல் தவிர்த்திருந்தார்.

குலநாயகத்துக்கு நடந்த இந்தச் சம்பவம் எல்லாம் மிகவும் கவலைக்குரியது.

மாவை சேனாதிராஜா மரணமடைந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுடன் தொடர்பு கொண்டு கட்சித் தலைமையகத்துக்கு அவரது புகழுடலைக் கொண்டுவர வேண்டிய தேவை இருக்கின்றது என்றும், ஆனபடியால் மாவையின் குடும்பத்தினருடன் கலந்து பேசி அந்த விடயத்தை நீங்கள் பொறுப்பெடுத்துச் செய்யுங்கள் என்றும் கேட்டிருந்தேன்.

அதன் பின்னர் எனக்கு அழைப்பெடுத்த சிறீதரன் தான் கதைத்திருப்பதாகவும், இந்த கிடயத்தில் முன்னேற்றம் இருப்பதாகவும், நீங்கள் வந்தால் தொடர்ந்து பேசலாம் என்றவாறாகவும் சொல்லியிருந்தார். இதற்கமைய நானும் சென்று பேசியிருந்தேன். இந்த விடயத்தில் சிறீதரன் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியும் இருந்தார்.

ஆனால், இறுதிச்சடங்குக்குமுதல்நாள் இரவு அழைப்பெடுத்த சிறீதரன் கட்சி அலுவலகத்துக்குப் புகழுடலைக் கொண்டு வருவதைக் குடும்பத்தினர் விரும்பவில்லை என்று கூறியிருந்தார்.

இதன் பின்னர் கட்சி உறுப்பினர்கள் 18 பேரின் பெயர் விவரங்களைப் படங்களுடன் போட்டு மாவையின் மரணத்துக்குக் காரணமான துரோகிகள் என்றவாறாக பல இடங்களில் பனர்களை கட்டித் தொங்க விட்டிருந்தார்கள்.

உண்மையில் இதெல்லாம் மிகப் பெரிய அபாண்டமான விஷமப் பிரசாரம்தான். அந்தப் பிரசாரத்தில் வெளிப்படுத்திய அந்தக் கடிதம் கூட ஒரு கோரிக்கைக் கடிதம் மட்டும்தான். ஆனால், அதில் கையெழுத்து வைத்த அத்தனை பேரையும் துரோகிப் பட்டம் கட்டி அந்தக் கடிதத்தின் பிரதியைச் சிலர் காவிக் கொண்டு திரிந்தனர்.

இந்த விடயங்கள் எல்லாவற்றையும் தொகுத்து திட்டமிட்டு விஷமப் பிரசாரத்தைச் சிலர் முன்னெடுத்து இருக்கின்றனர்.



இதில் வெறுமனே தமிழரசுக் கட்சி சார்ந்தவர்கள்தான் இருக்கின்றார்கள் என்றில்லை. தமிழரசுக் கட்சியை ஓரங்கட்டலாம், ஒழித்துக் கட்டலாம் எனக் கங்கணம் கட்டியவர்களின் சதியும் இதில் இருக்கின்றதா என்ற சந்தேகம் இருக்கத்தான் செய்கின்றது.

இந்தக் குழப்பங்களுக்கு மத்தியில் இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி தமிழரசுக் கட்சியை உடைத்து விடலாம் என்பதற்காக இவ்வாறு செய்திருக்கலாம் எனவும் நான் கருதுகின்றேன்.

அந்தக் காரணத்தினாலே காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கூட முறைப்பாட்டைப் பதிவு செய்திருக்கின்றேன். அந்த 18 பேரும் மத்திய செயற்குழு உறுப்பினர்கள். அவர்களால் என்னிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கட்சியின் தலைவர் என்ற வகையில் நானும் பொலிஸ் முறைப்பாடு செய்துள்ளேன். அது சம்பந்தமாக விசாரணைகள் நடக்கின்றன.

ஆனால், மரணத்துக்கு நாங்கள்தான் காரணம் என்று கூறுகின்ற அந்த விஷமப் பிரசாரத்தை மக்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் இது எங்கள் கட்சிக்கு எதிரான திட்டமிட்ட அபாண்டமான பிரசாரம். இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இங்கு இன்னுமொரு விடயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். மாவைக்கும் எனக்கும் இடையிலான உறவு 30 வருடங்களாக இருக்கின்றன. மாவைக்காகத் தேசியப் பட்டியல் கேட்டு சம்பந்தனுடன் வாதாடியதும் நான்தான். அதுமட்டுமல்லாது கட்சிக்குள்ளும் வெளியிலும் மாவைக்கு எதிராக ஏதும் நடக்கின்றபோதும் அவருக்கு ஆதரவாக நின்று பேசியவனும் நான்தான். அப்படி எங்களுக்கிடையே நல்ல உறவு இருந்தது.

அப்படிப்பட்ட ஒரு நல்ல மனிதனின் மரணச் சடங்கில் இப்படி ஒரு குழப்பமான வேலையைச் செய்தது தெய்வ நீதிக்கே மாறான ஒரு விடயம். இதை எல்லாம் யார் யார் செய்தார்கள் என்ற விசாரணையைப் பொலிஸார் ஆரம்பித்திருக்கின்றார்கள். இந்த விசாரணையைத் தொடர்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

குறிப்பாக அந்தப் பனர்களை அடித்தவர்கள், கொண்டு போனவர்கள், கட்டியவர்கள் எல்லாவற்றையும் பொலிஸார் பார்ப்பார்கள். ஏனெனில் இது எல்லாம் இருட்டிலே செய்த விடயங்கள் இல்லைத்தானே. ஆனபடியால் இந்தத் துரோகத்தின் வெளிப்பாடு கட்டாயம் வெளியில் வரும். அந்த உண்மை எப்போதும் வெளிவரும். அப்போது பார்த்துக்கொள்ளலாம்.

இந்தத் துரோகத்தனத்தைச் செய்தது எமது கட்சிக்காரர் மட்டுமில்லை. அரச புலனாய்வு, வெளிநாட்டுச் சக்திகள், ஊடுருவல் சக்திகள், மாற்றுக் கட்சிகள் என எல்லாமே இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

ஏனென்றால் இந்த இடத்திலே தமிழரசுக் கட்சியைப் பிளவுபடுத்தலாம், அழித்துவிடலாம் என்ற எண்ணப்பாடு அங்கே இருந்திருக்கின்றது என்பதை எங்களால் உணரக் கூடியதாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சியாக இருக்கின்ற தமிழரசுக் கட்சியை அழித்து விட வேண்டுமென்ற ஒரே ஒரு காரணத்துக்காகப் பலர் கங்கணம் கட்டிக்கொண்ட திரட்சிதான் மாவையின் மரணச்சடங்கில் இவ்வாறான குழறுபடிகளைத் திட்டமிட்டு மேற்கொண்டுள்ளனர்.

கட்சியை அழித்தோ அல்லது பிளவுபடுத்தியோ செய்யக் கூடிய செயற்பாடுகளை கட்சிக்குள் இருந்து எவரும் செய்வதை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தவிர்க்க முடியாததாக இருக்கின்றன.

ஆனபடியால் கட்சியின் அடுத்த கூட்டத்தில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்படுகின்றபோது சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராணுவ அதிகாரிகள், அவரது வீட்டின் ஹோலில் அமர்ந்து அவரது மனைவியோடும் அவரோடும் அச்சமயத்தில் உரையாடினர். அப்போது வீட்டில் தொங்கவிடப்பட்டிருந்த அனுமார் படம் ஒன்றைப் பார்த்து அந்த மூன்று இராணுவ அதிகாரிகளும் தங்களுக்கும் ஹிந்தியில் ஏதோ பேசிக் கொண்டனர்.

அப்போது குறுக்கிட்ட ஆசிரியர் திருச்செல்வம் மேற்படி அனுமர் படத்தைக் காட்டி "அவரா...? அவர்தான் முதலாவது ஐ.பி.கே.எவ். ஜவான்...!" என்றார் நெற்றியடியாக.

வாயடைத்துப் போன இந்திய அதிகாரிகள் நாணித் தலை குனிந்தனர்.

அவ்வளவு தூரம் இலங்கைக்கும் மந்திகள் பற்றிய கதைகளுக்கும் தொடர்புண்டு.

இப்போது தேங்காய் தட்டுப்பாடா...? அதற்கும் மந்திகள் மீதுதான் குற்றச்சாட்டு பாய்கிறது.

மின்வெட்டா...? அதற்கும் மந்திகள் தான் காரணம் என்கிறார்கள்.

சரி. ஒரு நாள் மின்வெட்டுக்கு குரங்கு காரணம் என்றால், இப்போது திடீரென ஒவ்வொரு நாளும் ஒன்றரை மணி நேரம் புதிதாக மின்வெட்டு தொடங்கி இருக்கிறார்கள். அதற்கான காரணம் மக்களுக்கு இன்னும் சரியாக விளங்கவில்லை. தெளிவுபடுத்தவும் இல்லை. அதற்கும் குரங்குகள்தான் காரணமோ தெரியவில்லை....!

இதற்கிடையில் குரங்குகள் பற்றிக் கணக்கெடுப்பதற்கு பெருந்தொகை பணத்துடன் திட்டம் தயார் என்கிறார்கள்.

பொலிஸ் உட்பட பல திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளை இந்தக் குரங்குகள் கணக்கெடுப்புக்கு உதவும்படி அரசுத் தலைமை கட்டளையிட்டு இருப்பதாகவும் தகவல்.

கொஞ்சம் காலத்துக்கு முன்னர் குரங்குகளைப் பிடித்துச் சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது பற்றியும் பேச்சு அடிபட்டது .

குரங்குகள் கணக்கெடுப்பின் பின்னர் இந்த ஏற்றுமதி நடவடிக்கை ஜரூராக ஆரம்பமாகுமோ தெரியவில்லை.

எது, எப்படி என்றாலும் 'செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மீது...!' என்பது போல எல்லா விடயங்களிலும் பொறுப்புக்களைத் தூக்கி போட நம் முன்னோர்கள் (கூர்ப்புக் கொள்கையில் அப்படித்தான் குரங்குகளைக் கூறுகிறார்கள்) வசதியாக வாய்த்திருக்கிறார்கள். அதனால் எல்லா விடயங்களையும் மந்திகள் தலையில் போட்டு ஜமாய்க்கிறார்கள்....!

---

## பாரதியின் மறைவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆளுநர் நா.வேதநாயகன் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் மறைவுச் செய்தியைக் கேட்டு நான் மிகவும் வருத்தமடைகின்றேன்.

ஊடகத்துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்புகள் விலைமதிப்பற்றவை. தனது அர்ப்பணிப்பு மற்றும் கொள்கைகளை அவர் நிலைநிறுத்தி, மக்களுக்கான குரலாக மாறியே பணியாற்றினார்.

பல்வேறு ஊடகங்களில் பணியாற்றியிருந்தாலும் அவரது எண்ணம் - சிந்தனை எல்லாமே மக்களுக்கானதாகவே மாத்திரம் இருந்தது.

ஊடக அறநெறியைப் பின்பற்றிய ஒருவராக தமிழ் ஊடகத்துறையில் அன்னாரைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

அவரது இழப்பை தமிழ்ச் சமூகமும், ஊடகச் சமூகமும் ஆழமாக உணர்கின்றது.

வடக்கு மாகாண நிர்வாகத்தின் சார்பாக, வடக்கு மக்கள் சார்பாக, அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு எனது மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரது ஆன்மா சாந்தியடையட்டும்." - என்று வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

---

## தையிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செவ்வாய்க்கிழமை, நாளை புதன்கிழமை ஆகிய இரண்டு நாட்களிலும் தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தையிட்டி பகுதியில் உள்ள சுமார் 7 ஏக்கர் காணியை அடாத்தாகக் கையகப்படுத்தி எவ்வித அனுமதிகளும் இன்றி சட்டவிரோதமாக திஸ்ஸ ராஜமகா விகாரை எனும் விகாரை கட்டப்பட்டுள்ளது எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இருந்த மக்கள் யுத்தம் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் அங்கிருந்து வெளியேறியிருந்தனர். பின்னர் அப்பகுதியை உயர்பாதுகாப்பு வலயமாக இராணுத்தினர் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

பின்னர் யுத்தம் நிறைவடைந்த நிலையில் மக்கள் மீள்குடியேற இராணுவத்தினர் கட்டம் கட்டமாக அனுமதித்தனர். அவ்வேளை தற்போது விகாரை அமைந்துள்ள மற்றும் அதனைச் சூழவுள்ள சுமார் 14 ஏக்கர் காணியில் மக்கள் மீள் குடியேற இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

குறித்த பகுதியில் எவ்வித அனுமதிகளும் இன்றி, யாழ். மாவட்ட மற்றும் தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் விகாரையின் கட்டுமானப் பணிகளை நிறுத்தி அப்பகுதிகளை மக்களிடம் மீள ஒப்படைக்குமாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும், காணிகள் மீளக் கையளிக்கப்படாது, இராணுவத்தினரின் உதவியுடன் விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளான 14 ஏக்கர் காணியையும் காணி உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்க வேண்டும் எனக் காணி உரிமையாளர்கள் சுமார் ஒரு வருட காலத்துக்கு மேலாகப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், இன்று செவ்வாய்க்கிழமை, நாளை புதன்கிழமை ஆகிய இரண்டு நாட்களும் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும், அதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் எனவும் காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணி உரிமையாளர்களின் கோரிக்கையை அடுத்து பல்வேறு தரப்பினரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

---

## உள்ளூராட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நிலுவையில் உள்ளது. அது, நாளை 12ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் கிடைக்க வேண்டும். புதிய சட்ட மூலங்கள் தொடர்பான சட்ட ஒழுங்கு ஏற்பாடுகளின்படி அதுவே உரிய கால அவகாசமாகும்.

அப்படி கிடைக்கும் உயர் நீதிமன்றத்தின் முடிவை நாடாளுமன்றத்துக்கு அறிவிப்பதற்காக எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றத்தை விசேடமாகக் கூட்டுவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 10:30 மணிக்கு தமது முதலாவது வரவு - செலவுத் திட்டத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார்.

அன்று பிற்பகல் 2 மணி முதல் மாலை 7 மணி வரை உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றம் விசேடமாகக் கூடுகின்றது. அன்றைய தினமே அந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அறிவித்தல்களை விடுக்கும் அதிகாரம் அடுத்து வரும் நாள்களில் தேர்தல் ஆணையத்துக்கு வந்து விடும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை தமிழ் - சிங்களப் புது வருடம் முடிந்து அடுத்த 10 நாள்களில் - பெரும்பாலும் ஏப்ரல் 24ஆம் திகதி - நடத்தக் கூடியதான தீர்மானம் ஒன்றைத் தேர்தல் ஆணையம் எடுப்பதற்கு இடம் அளிக்கும் விதத்தில் இந்தச் சட்ட நிறைவேற்ற ஏற்பாடுகள் அவசர அவசரமாக முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிகின்றது.

2023ஆம் ஆண்டு முற்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களின் அடிப்படையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டிய நிலையில் அந்தத் தேர்தல் நிலுவையில் உள்ளது. அந்த வேட்புமனுக்களை இரத்துச் செய்து, புதிதாக வேட்புமனுக்களை ஏற்று, தேர்தலை நடத்துவதற்கு வசதி செய்யும் திருத்தச் சட்ட மூலமே தற்போது வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, உயர் நீதிமன்ற ஆய்வின் பின்னர் அதன் தீர்ப்பை பெறுவதற்காகக் காத்திருக்கப்படுகின்றது.

அந்தத் தீர்ப்பை நாளை 12ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் கிடைக்கக் கூடியதாக உயர் நீதிமன்றம் அனுப்ப வேண்டும்.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கும் நோக்கில் 2025 பெப்ரவரி 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு விசேடமாக நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய நேற்றைய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று நாடாளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலி தலைமையில் நேற்றுக் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 16 இன் ஏற்பாடுகளுக்கு அமைய பிரதமரினால் சபாநாயகரிடம் விடுக்கப்படும் கோரிக்கைக்கு அமைய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அழைப்பு விடுக்கப்படுகின்றது.

அத்துடன், பெப்ரவரி 14ஆம் திகதி இந்தச் சட்டமூலத்தை ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக் குழுவைக் கூட்டுவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

07

# மின்வெட்டு இடம்பெறும் முறை குறித்து அறிந்து கொள்ள புதிய முறைமை அறிமுகம்



தமது பிராந்தியங்களில் மின்வெட்டு இடம்பெறும் முறை குறித்து அறிந்து கொள்வதற்காக புதிய முறைமை ஒன்றை இலங்கை மின்சார சபை நடைமுறைப்படுத்தியுள்ளது.

மின்சார சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட https://dm.ceb.lk என்ற இணையதளத்திற்குப் பிரவேசித்து, மின்வெட்டு இடம்பெறும் முறை குறித்து அறிந்து கொள்ள முடியும்.

இதேவேளை மின்சார சபையின் கைப்பேசி செயலி மூலம் அல்லது 1987 என்ற தொலைபேசி எண்ணுக்குக் குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலமும் மின்வெட்டு இடம்பெறும் முறை குறித்து அறிந்து கொள்ள முடியும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

# லிட்ரோவின் விலைத் திருத்தம் அரசின் நிலைப்பாடு விரைவில்




லிட்ரோ நிறுவனம் முன்வைத்த எரிவாயு விலை திருத்தம் தொடர்பிலான கோரிக்கை தொடர்பில் அரசாங்கம் தமது நிலைப்பாட்டினை அறிவிக்கும் என நிதி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையின் விலைகளுக்கு ஏற்ப நாட்டின் எரிவாயு விலையினை திருத்துவதற்கான கோரிக்கையை லிட்ரோ நிறுவனம் முன்வைத்துள்ளதாகத் தகவல் வெளியாகியிருந்தது.

இந்த நிலையிலேயே, லிட்ரோ நிறுவனம் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் தமது நிலைப்பாட்டினை அரசாங்கம் அறிவிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, லிட்ரோ எரிவாயு விலை திருத்தத்திற்கு ஏற்ப புதிய விலைகள் விரைவில் அறிவிக்கப்படும் என லாஃப் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சித்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துமாறு உயர் நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் பின்னணியில், இதற்கு மதிப்பளிக்கும் வகையில் தேர்தலை மேலும் காலதாமதப்படுத்தாது நடத்துவதன் அவசியத்தை சபை முதல்வர், அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் நேற்றைய கூட்டத்தில் சுட்டிக்காட்டினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, உள்ளூராட்சி சபை தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 2.00 மணி முதல் பி.ப 7.00 மணிவரை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் திருத்தங்களை முன்வைப்பதாயின் அவற்றை பெப்ரவரி 17ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் வழங்குவதற்கும் இங்கு இணங்கப்பட்டது.

அதேநேரம், நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியால் 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு - செலவுத் திட்ட உரை) முன்னர் தீர்மானிக்கப்பட்டமைக்கு அமைய பெப்ரவரி 17ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு முன்வைக்கப்படும் என்றும் பதில் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வாய்ச் சவடால் அறிவிப்பு

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வரும் மாகாண சபை முறைமை நீண்டு நிலைக்கக்கூடிய நிரந்தர தீர்வு என நாம் நம்பவில்லை. எனினும், மாகாண சபை முறைமையைத் தமக்குக் கிடைத்த உரிமையாகத் தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

"எனவேதான் மாகாண சபை முறைமை மீது கைவைக்காதிருக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. மாகாண சபை முறைமையை அர்த்தமுள்ள முறைமையாக மாற்றியமைப் போம். இந்த வருடத்துக்குள் அல்லது அடுத்த வருடம் முற்பகுதியில் அதற்கான தேர்தல் நடத்தப்படும்."

- இவ்வாறு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு அமைவாக கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழேயே மாகாண சபை முறைமை ஏற்படுத்தப் பட்டது.

அந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்தும், அதை நடைமுறைப்படுத்தும் 13 ஆவது திருத்த ஏற்பாடுகளை ஆட்சேபித்தும் அச்சமயத்தில் ஆயுதம் ஏந்திப் போராடிய குழுவே இன்று அமைச்சர் சந்திரசேகரன் அங்கம் வகிக்கும் ஆட்சித் தரப்பான ஜே.வி.பி. அந்த அணியே இன்று அதிகாரத்தைக் கைப்பற்றி, ஆட்சி அமைத்து, இந்தக் கருத்தை முன்வைக்கின்றது.

இந்த கருத்து நிலை மாற்றம் வரவேற்கத் தக்கது. எனினும், அது, அக்கட்சியின் - அத்தரப்பின் - அடி மனதில் இருந்து வரும் உண்மையான நிலைப்பாடா என்பது சந்தேகத்திற்குரியதே.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் வந்த காலத்தில் ஆயுதமே ஏந்திப் போராடிய ஜே.வி.பி. ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு நீண்ட காலமாகிவிட்டது.

ஆயினும், அந்த ஆயுதப் போராட்ட காலத்தில் மாகாண சபைகள் தொடர்பில் எடுத்த தனது நிலைப்பாட்டை, ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்ட பின்னரும் நீண்ட காலம் அது தொடர்ந்து தன் நிலைப்பாடாகப் பேணியது என்பதை மறுப்பதற்கில்லை.

வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபை முறைமையையே தமிழர்கள் தமக்குக் கிடைத்த உரிமையாக கருதினர். அந்த வடக்கு - கிழக்கு இணைப்பை நீதிமன்றம் சென்று பிளந்தவர்களே இந்த ஜே.வி.பினர்தான். அப்போது தமிழர்கள் தமக்கு உரிமையாக கிடைத்த விடயத்தை பிளந்து, அதனை நீர்த்துப் போகச் செய்த ஜே.வி.பியினரே இப்போது தமிழர்களுக்கு கிடைத்த உரிமை மாகாண சபை, ஆகவே அதன் மீது நாங்கள் கை வைக்க மாட்டோம் என்று கூறுவது வேடிக்கையானது.

ஏற்கனவே அதன் மீது கை வைத்து, அதனை நீர்த்துப் போக வைத்த சந்திரசேகரன் உட்பட்ட தரப்பினர் இப்போது மாறிப் பேசுவது தமிழ் மக்களை அரசியல் ரீதியாக முட்டாள்கள் என கருதித்தான் போலும்.

ஆட்சிக்கு வந்ததும் மாகாண சபை தேர்தலை நடத்தி, மாகாண ரீதியில் நிர்வாகங்களை அந்தந்த மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிப்போம் என்று கூறிய ஆட்சித் தரப்பினர், இப்போது அவ்விடயத்தில் காலத்தை இழுத்தடித்து வருகின்றனர்.

முதலில் இவ்வாண்டு நடுப்பகுதியில் மாகாண சபை தேர்தல் என்றார்கள். பின்னர் இவ்வாண்டு இறுதிக்குள் எப்படியும் தேர்தலை நடத்துவோம் என்றார் ஜனாதிபதி. இப்போது இந்த வருடத்தில் அல்லது அடுத்த வருட முற்பகுதியில் அத்தேர்தல் என்று கதை விடுகிறார் அமைச்சர் சந்திரசேகரன்.

வடக்கு மக்கள் தங்களைத்தான் - தங்களின் தேசிய மக்கள் சக்தியைத்தான் - முதன்மைக் கட்சியாகத் தெரிவு செய்துள்ளனர் என்று பீற்றிக் கொள்ளும் அமைச்சர் சந்திரசேகரன், துணிவிருந்தால் மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்தி, மாகாண சபையையும் அந்த முதன்மை கட்சி ஸ்தானம் மூலம் தங்கள் கைகளில் உறுதிப் படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

ஆனால் அதைச் செய்யாமல், மாகாண சபை தேர்தலை அடுத்த வருடம் வரை தள்ளிப் போடுகின்ற கைங்கரியம் பற்றித்தான் அவர் பேசுகிறார்.

மாகாண சபை தொடர்பில் அவரது பீற்றல் அறிவிப்பின் அல்லது வாய்ச் சவடால் அறிவிப்பின் உள்ளர்த்தம் தமிழ் மக்களுக்கு நன்கு புரியும்.







# மரக்கடத்தல் முறியடிப்பு; கப்ரக வாகனத்துடன் சாரதி கைது.

(பா.சதீசன்)

கூழாமுறிப்பு வி காட்டுப்பகுதியில் அறுக்கப்பட்டு கடத்துவதற்கு தயாராக இருந்த தேக்குமரக்குற்றிகளை கைப்பற்றியதோடு, வாகன சாரதி ஒருவரையும் ஒட்டுசுட்டான் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு வி காட்டுப்பகுதியில் மரக்கடத்தத்தல் இடம்பெறவுள்ளதாக ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரி.சுபேசனுக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்று திகாலை புதுக்குடியிருப்பு நோக்கி கொண்டு செல்ல தயாராக இருந்த நிலையில் 11 தேக்கு மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய 29 வயதுடைய வசந்தபுரம் மன்னாகண்டலை சேர்ந்த சாரதி ஒருவர் கப்ரக வாகனத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர்

# நான்கு அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமனம்

நான்கு அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு நேற்று உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளதன் காரணமாக இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன.

பதில் பாதுகாப்பு அமைச்சராக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராக வெளிநாட்டலுவல்கள்



மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.



# பாரம்பரிய விளையாட்டுக்களுடன் சிறப்பாக இடம்பெற்ற பொங்கல் விழா

(பா.சதீசன்)

பாரம்பரிய கலைநிகழ்வுகளுடன் 2025 ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழாவும், பாரம்பரிய விளையாட்டுக்களும் வற்றாப்பளை கண்ணகி மாட்டுவண்டி சவாரி திடலில் மிகவும் சிறப்புற இடம்பெற்றிருந்தது.


தமிழ் வணிகர் நடுவம், ஐக்கிய இராச்சியம் நிதி அனுசரனையுடன் கண்ணகி மாட்டுவண்டி சவாரிச்சங்கத்தினரின் ஏற்பாட்டில் 2025 ஆம் ஆண்டுக்கான உழவர் தின பெருவிழா நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றிருந்தது.

கொடியேற்றத்தினை தொடர்ந்து, மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய குறித்த நிகழ்வில் பாரம்பரிய இசையான பறை , தப்பாட்ட குழுவினரின் வரவேற்பு நிகழ்வுடன் பொங்கல்விழா ஆரம்பமாகியிருந்தது. அதனை தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுக்களான கிளித்தட்டு, தலையணை சண்டை, கிறிஸ்மரம் ஏறுதல், சவால், வணிஸ் சாப்பிடுதல், வலூன் ஊதி உடைத்தல், படகோட்டபோட்டி, முட்டிஉடைத்தல், சாக்கோட்டம், கயிறு இழுத்தல் போன்ற போட்டிகள் இடம்பெற்று வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

இந்த உழவர் தின போட்டியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், புலம்பெயர் உறவுகள், கண்ணகி மாட்டுவண்டி சவாரிச்சங்கத்தினர், விவசாயிகள் , சிறுவர்கள், இளைஞர்கள் , பொதுமக்கள் என பலரும் ஆர்வத்துடன் கலந்து சிறப்பித்திருந்தனர்.












# பூசத் திருநாள் பொலிவுடைத் திருநாள்!



ஒவ்வொரு நாளும் உன்னதம் ஆகும்
ஒவ்வொரு மாதமும் உயர்வுடை ஆகும்
ஒவ்வொரு பொழுதும் இறையின் உணர்வுடனே
இருந்திடு என்று மொழிந்தனர் முன்னோர்

நாளையும் கோளையும் நலமுடன் பார்த்தனர்
ஒவ்வொரு வேளைக்கும் உயர்வை அளித்தனர்
அவ்வழி மலர்ந்தன அகிலத்தில் விழாக்கள்
ஆண்டவன் நினைப்பை அகமதில் அமர்த்திட

மார்கழி என்பது மாண்புடை மாதம்
பீடை என்று பிதட்டியே நின்றனர்
சிவனையும் மாலையும் போற்றிட வைத்து
பீடுடை மாதமாய் ஆக்கினார் முன்னோர்

ஆன்மீகம் கலந்த அற்புத மாதமாய்
வருடக் கடைசியை மனத்தில் இருத்தினர்
தையில் தொடங்கி மார்கழி வரைக்கும்
தனித்துவம் கொடுத்து போற்றிட வைத்தனர்

தையில் பொங்கல் மங்கலத் தொடக்கம்
தையில் பூசம் பற்பல சிறப்பு
கந்தனை நினைத்து வந்தனை செய்திட
வந்ததே தைப் பூசத் திருநாள்

அருவமாய் இருந்தது உருவம் ஆனது
அரனின் கனற்பொறி அதினுள் இருந்தது
ஆதியாம் சிவனின் மைந்தனாய் வந்தான்
அவனே கந்தனாய் ஆகியே நின்றான்

பூசத் திருநாள் பொலிவுடைத் திருநாள்
தேசுடைக் கந்தனை சேவிக்கும் பெருநாள்
மாசிலா வேலினை மாதுமை கொடுத்த
மகத்தான திருநாள் தைப்பூசத் திருநாள்

வேலின் மகத்துவம் மேவிடும் திருநாள்
வேலவன் சன்னதி யாவரும் குவிவார்
காவடி எடுப்பார் கந்தனைப் பரவுவார்
சாதிகள் கடந்து சமத்துவம் ஆகுவார்

புதிரும் எடுப்பார் புதிதும் தொடங்குவார்
எழுத் தறிவிக்க ஏடும் தொடங்குவார்
தொடங்கும் அனைத்தும் துலங்கும் என்று
எண்ணியே ஏற்றுவார் பூசத் திருநாள்

காது குத்துவார் காரியம் தொடங்குவார்
கந்தனை எண்ணியே யாவும் ஆற்றுவார்
தம்மை மறந்து அலகும் குந்துவார்
தனிப்பெரும் கருணையாய் கந்தனைப் போற்றுவார்

தமிழும் சைவமும் போற்றிடும் திருநாள்
சம்பந்தம் பெருமான் காட்டிடும் திருநாள்
ஒளியாய் இருக்கும் கந்தனை யாவரும்
உவப்புடன் ஏற்றியே போற்றிடும் திருநாள்!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ் மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ண்,**
**ஆஸ்திரேலியா.**



# இன்று தைப்பூசம்!

தைப்பூசம் என்பது இந்துக்கள் வாழும் நாடுகளில் முருகப் பெருமானுக்கு கொண்டாடப்படும் ஒரு விழா ஆகும்.

தை மாதம் தமிழர்களுக்கு புனிதமான மாதமாகும். முருகனுக்கு உகந்த நாள் தைப்பூச தினம் என்பர்.

தைப்பூசம் ஆண்டுதோறும் தை மாதம் (தமிழ் பஞ்சாங்கப் படி பத்தாவது மாதம். இது பூஸா மாதம் என்றும் அறியப்படும்) பூச நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிவரும் நன்நாளில் முருகனுக்கு எடுக்கப்படும் விழாவாகும்.

1. முருகப்பெருமான் பிறந்த நாள்

2. தை பூசத்தன்று முருகன் தருகாசுரனை வதம் செய்த நிகழ்வு ஒரு விழாவாக பழனியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

3. சிவபெருமான் உமா தேவியுடன் இருந்து சிதம்பரத்தில் ஆனந்த நடனம் ஆடி, தரிசனம் அளித்த நாள் தைப்பூசம் என்பர்

4. தேவர்களில் குருவாகிய பிரகஸ்பதியின் நட்சத்திரம் பூசம் என்பதால் தைப்பூசத்தன்று குரு-வழிபாடு செய்வது ( வியாழன்) மிகுந்த பலனைத் தரும் என்பர்.

தைப்பூசத்தில்தான் இலங்கையில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் புதிர் எடுப்பர். தைப்பூசம் முருகனுக்கு உரிய சிறப்பான தினமாகக் கொண்டாடப்படுகின்றது. அன்று அதிகாலையில் எழுந்து வீடு வாசலைச் சுத்தம் செய்து வீட்டில் இருக்கும் ஆண்கள் நெல்லறுக்கும் அரிவாள், தேங்காய், கற்பூரம், கத்தி, கடகம் என்பவற்றுடன் வயலுக்குச் சென்று கிழக்கு முகமாக நின்று சூரியனை வணங்கி ஒருவர் தேங்காய் உடைக்க மற்றவர் முற்றிய புது நெற்கதிர் சிலவற்றை அறுத்து வீட்டுக்கு எடுத்து வருவர்.

அதனைக் குடும்பத் தலைவி பெற்று சுவாமி அறையில் வைப்பார். அதில் இருந்து சில நெல்மணிகளை எடுத்து உமியை நீக்கி அந்த அரிசியைப் பசும்பாலுடன் கலந்து வாழைப்பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி அதில் இட்டு குடும்பத்தினருக்குப் பரிமாறுவர். அந்த அரிசியுடன் வீட்டிலுள்ள அரிசியையும் கலந்து அன்றைய மதிய உணவு சமைக்கப்படும். ஊரில் உள்ள கோயில்களில் பால் குடம் எடுத்தும் காவடி எடுத்தும் தத்தம் நேர்த்திகளை நிறைவேற்றுவர்.

இந்த நன்னாளில் நல்ல காரியங்கள் ஆரம்பித்துச் செயற்படுத்தப்படுவதும் தமிழர்களது பாரம்பரியமாக உள்ளது.

தைப்பூசத் திருநாளை கொண்டாடி மகிழ்வோம்.

**வித்தகர் விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா.**




# நல்லூரான் தெற்கு வாசல் வளைவு
# இன்று தைப்பூசத்தில் திறப்பு நிகழ்வு

**- முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் -**
**(இணைத் தலைவர், நல்லூர்**
**சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல்)**

நல்லூர் கந்தசுவாமி கோவில் –

சைவசமயத்தின் புனித நிறைவின் அடையாளம்.

யாழ்ப்பாணத்தினது பெருமையின் அடையாளம்.

சைவத் தமிழ் மக்கள் பண்பாட்டு மேன்மைக்கு அடையாளம்.

கந்தபுராணக் கலாசார இருப்பின் அடையாளம்.

அழகு, நேர்த்தி,கட்டுப்பாடு,நேரமுகாமை, புத்தாக்க செயற்பாடுகள் ஆகியவற்றில் முன்மாதிரிகளின் அடையாளம்.

பழமை பேணி புதியன காணும் உயர் பண்பின் அடையாளம்.

சைவ ஆலயங்களின் வழிகாட்டி.

உள் நாட்டில் மட்டுமின்றி உலகத் தலைவர்கள்,– அமைச்சர்கள், மற்றும் கோடானகோடி பக்தர்கள் ஆகியோரின் உளங்கவர்ந்த உன்னத ஆலயம்.

இவ்வகையில் இதனை வளர்த்தெடுத்த ஆலய நிர்வாகிகள் – மாப்பாணர் பரம்பரையினர், பாராட்டுக்குரியவர்கள்.

ஆலயத்தை இவ்விடத்தில் ஸ்தாபனம் செய்த சிறாப்பர் தொன்யுவான் முதலாம் இரகுநாத மாப்பாண முதலியார் தொடக்கம் பத்து மாப்பாணர் வம்ச பரம்பரையினரின் திறன்மிகு நிர்வாகச் செயற்பாடுகளைத் தொடர்ந்து, தற்போது பதினோராம் மாப்பாண முதலியாரது நிர்வாகம் சிறப்புடன் நடைபெற்று ஆலயம் மேலும் வியத்தகு வளர்ச்சி கண்டு வருகின்றது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருமையின் அடுத்த மைல்கல் நல்லூரான் தெற்கு வாசல் வளைவு. ஏற்கெனவே உள்ள நல்லூரான் செம்மணி வளைவுக்கு அடுத்து இவ்வளைவு தோற்றம் பெற்றுள்ளது.

இத்தகு வளைவுகள் வெறும் அலங்காரத்துக்காக அமைவு பெறுவன அல்ல. சமூக,சமய ,வரலாற்று, பண்பாட்டு அடையாளச் சின்னங்கள் அவை.

இந்நோக்கில் உலகசெல்நெறியில் பல நாடுகளில் பல்வகை அடையாள வளைவுகள் மேற்சொன்ன நோக்கில் அமையப் பெற்று முக்கியம் கொள்கின்றன.

அந்த உலக செல்நெறியை உள்வாங்கி அமைவு பெற்று வருபவை நல்லூரான் வளைவுகள்.

அந்த வரிசையில் "நல்லூரான் தெற்கு வாசல் வளைவு" இன்று 11.02.2025 தைப்பூசத் திருநாளன்று நண்பகல் 12.00 மணிக்கு தெய்வேந்திர முகூர்த்த நன்நேரத்தில் கந்தசுவாமியார் பெருங்கருணையுடன் "காண்பிய விரிப்புக்கு" உள்ளாகின்றது.

நல்லூரான் தெற்கு வாசல் வளைவின் சிறப்பம்சங்கள்.

நல்லூரன் தெற்கு வாசல் வளைவு கட்டடமும் யாழ்ப்பாணத்தின் கந்தபுராண கலாசாரத்தை அடையாள படுத்தி உயர்வித்து நல்லூர் கந்தசுவாமியாரின் அருட் கடாட்சத்தை வெளிப்படுத்தி பக்தர்களை ஆற்றுப் படுத்தும் நோக்கில் அமையப் பெற்றுள்ளது.

சிறப்பாகக் கொடுங்கை அமைப்புடன் கூடிய நுழைவாயில் அமைக்கப் பெற்று நடுவில் இரண்டு தளங்களைக் கொண்ட இராஜ கோபுரம் ஐந்து கலசங்களைக் கொண்ட அமைப்புடன் இது நிறுவப்பட்டுள்ளது.

கட்டடத்தைப் பஞ்சாங்க வேலைப்பாடுகளுடன் அமைந்த நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன.

இராஜ கோபுரத்தின் நடுவில் தெற்கு நோக்கி சண்முகப் பெருமான் (ஆறுமுகசுவாமி) வள்ளி,தெய்வானை சமேதரராய் மயில்மீது அமர்ந்து காட்சிதருகின்றார்.

இராஜ கோபுரத்தின் மறுபக்கத்தில் நடுவில் வடக்கு நோக்கி முத்துக்குமார சுவாமியார் வள்ளி தெய்வானை சமேதரராய் மயில் மீது அமர்ந்து காட்சி தருகின்றார்.

கோபுரத்தின் மேற்தளத்தில் கிழக்கு நோக்கி சரஸ்வதியும் மேற்கு நோக்கி மகா லக்சுமியும் வீற்றிருக்கின்றனர்.

கோபுரத்தின் இருமருங்கிலும் கிழக்கேயும் மேற்கேயும் சதுரப் பண்டிகை அமைப்பு காணப்படுகின்றது.

இவற்றை அடுத்து வடகிழக்குத் திசையிலும் தென்மேற்குத் திசையிலும் (இரண்டு) விநாயகப் பெருமான்

**தொடர்ச்சி▼**

# நல்லூரான் தெற்கு வாசல் வளைவு இன்று தைப்பூசத்தில் திறப்பு நிகழ்வு

தொடர்ச்சி▲

காட்சி தருகின்றார்.

மேலும் வட மேற்கு திசையிலும் தென்கிழக்குத் திசையிலும் (இரண்டு) பைரவப் பெருமான் வீற்றிருக்கின்றார்.

இராஜ கோபுரத்தின் முதலாம் தளத்தில் கோடிப் பூதங்கள் மொத்தம் நான்கும் கந்தசுவாமியாரின் இஷ்ட வாகனமான மயில் மொத்தம் எட்டும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இராஜ கோபுரத்தின் முதலாம் தளத்தின் நடுவில் இரு மருங்கும் கஜலச்சுமி காட்சி தருகின்றார்.

கொடுங்கை அமைப்புடனான நான்கு மூலைகளிலும் கோடிப் பூதங்கள் மொத்தம் நான்கு மேலும் காட்சிப் படுத்தப் பட்டுள்ளனர்.

வாயிற் தூண்களில் தெற்கு நோக்கி வாயிற் காவலர்களும் வடக்கு நோக்கி காவடி ஏந்திய பக்தர்களும் இருமருங்கிலும் காட்சி தருகின்றனர்.



இவ்வாண்டு நல்லூர் பெருந்திருவிழாக் காலம் முதல் முருகனடியவர்களும் காவடிகளும் மேற்படி வளைவினூடே வருகை தந்து எம்பெருமானைத் தரிசிக்க இறையருள் கூடி நிற்பதாகட்டும்.

# இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் உலகப் பெருமஞ்சத் திருவிழா இன்று!



(எஸ்.நிதர்ஷன்)

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று (11) தைப்பூசத் திருநாளை முன்னிட்டு உலகப் பெருமஞ்சம் வீதியுலா நடைபெறவுள்ளது.

இன்று மாலை 6 மணிக்கு முருகப் பெருமான் மெருகூட்டப்பட்ட மஞ்சத்தில் ஏறி பக்தர்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார்.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வருகை தரும் பெரும்பாலானவர்கள் மஞ்ச திருவிழாவில் கலந்துகொள்வர்.

தைப்பூச தினமான இன்று காலை 5.30 மணிக்கு அபிஷேகங்கள் இடம்பெற்று விசேட பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் இருந்து பாற்குட பவனி இடம்பெறும்.

பாற்குட பவனியில் கலந்து கொள்ளவுள்ள பக்தர்களின் நலன் கருதி ஆலயத்தினரால் பால், செம்பு உள்ளிட்ட அனைத்து பொருள்களும் வழங்கப்படும். தேவையானவர்கள் முன்னரே பதிவுகளை மேற்கொள்ளுங்கள். பாற்குட பவனியை தொடர்ந்து காவடி எடுத்தல் நிகழ்வு இடம்பெறும்.

அத்துடன், ஆலயத்துக்குச் சொந்தமான சங்குவேலியில் உள்ள வயலில் நெல் அறுவடை செய்து, அதனை எருது வண்டியில் ஆலயத்துக்கு பாரம்பரிய முறைப்படி எடுத்து வந்து, ஆலய முன்றலில் நெல் குத்தி, அரிசியாக்கி, அந்த அரிசியில் பொங்கல் நிகழ்வு இடம்பெறும்.

பொங்கல் நிகழ்வில் பக்தர்களும் கலந்து கொண்டு, ஆலய சூழலில் பொங்கல் வழிபாடுகளில் ஈடுபடலாம். பொங்கல் பொருள்களை எடுத்துவர சிரமம் எனில் ஆலயத்தில் பொங்கல் பொருள்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொங்கல் நிகழ்வுகள் நடைபெறும் வேளையில் ஆலய மணி மண்டபத்தில் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

இவற்றைத் தொடர்ந்து மாலை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை இடம்பெற்று, ஆறுமுகசுவாமி, வள்ளி தெய்வானை சமேதரராய் உலகப் பெருமஞ்சத்தில் எழுந்தருளிப் பக்தர்களுக்கு அருட்காட்சி அளிப்பார்.

திருமஞ்சத்தில் முருகப்பெருமான் வீதியுலா வரும்வேளை வீதியில் பாரம்பரிய கலை கலாச்சார நிகழ்வுகள் இடம்பெறும் என்றும் ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர்.

# தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினை ஒட்டுமொத்தத் தமிழர்களின் பிரச்சினை

## அதை உணராவிடில் பாரிய ஆபத்து என்கிறார் அருட்தந்தை சத்திவேல்





(பா.சதீசன்)

தையிட்டி விகாரைப் பிரச்சினை ஒட்டுமொத்த தமிழர்களின் பிரச்சினை என்பதை உணராவிடில் பாரிய ஆபத்திற்கே அது இட்டுச் செல்லும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

தாம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான தையிட்டியில் தமிழர்களின் அரசியலுக்கு சவால் விட்டும் ஆக்கிரமிப்பின் நோக்கத்தோடும் படையினர் திஸ்ஸ விகாரையும், தூபியையும் அமைத்துள்ளமை சட்ட விரோதமானது மட்டுமல்ல, அது மனித நீதிக்கும், மக்களின் அமைதி வாழ்வுக்கும், சமாதானத்திற்கும், நாட்டின் அரசியல் செல்நெறிக்கும் எதிரானதோடு இறைநீதிக்கும் எதிரானதாகும் என்பதால் சமய அமைப்புகளும் அதன் தலைமைத்துவங்களும் - விசேடமாக வடகிழக்கில் இருக்கும் சமய அமைப்புகளும் சமய தலைமைத்துவங்களும் - இனியும் மௌனம் காக்காது தாம் சார்ந்த சமயநெறி நின்று மக்களின் சார்பெடுத்து இறைநீதி குரல் எழுப்ப வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

யுத்த காலத்தில் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் படையினரால் புரியப்பட்ட சட்ட விரோத செயற்பாடுகள், கொலைகள், காணாமலாக்குதல் தொடர்பில் மக்கள் நீதி கேட்டு வீதியில் நிற்கின்றனர். மேலும் சர்வதேச கதவுகளையும் தட்டுகின்ற நிலையில் சமய அமைப்புகளும் மக்களுக்கு தூரமாகவே நிற்பதை அவதானிக்கின்றோம். ஆனால் ஒரு சில சமய அருட் தொண்டர்கள் துணிச்சலோடு மக்களோடு நின்று குரல் எழுப்புகின்றனர். இன்னும் சிலர் உயிர் தியாகிகளாகியுள்ளனர். அவர்களை பாராட்டுகிறோம். அவர்கள் வரலாற்றில் பதியப்பட்டவர்களாவர். இவர்களை சமய அமைப்புகளும், அதன் தலைமைத்துவங்களும் உரிய அங்கீகாரம் அளிக்காமை வேதனை அளிக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையில் தையிட்டி விகாரைப் பிரச்சினை என்பது அக்கிராம மக்களின் பிரச்சினையோ, அது அமைந்துள்ள தனியார் காணி உரிமையாளர்கள் பிரச்சினையோ, அல்லது ஏதோ ஒரு கட்சியின் பிரச்சினையோ அல்ல. இது ஒட்டுமொத்த தமிழர்களின் பிரச்சினை. தமிழர் தாயகப் பிரச்சினை. இது, நாட்டின் அரசியல் பிரச்சினை என்பதை உணராவிடில் பாரிய ஆபத்திற்கே இட்டுச் செல்லும் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

எழுந்துள்ள விகாரைப் பிரச்சினை கடந்த காலங்களில் படையினர் புரிந்த மனித படுகொலைகளையும் மேவிய அரசியல் கொலை அடையாளமாகும். அரச பயங்கரவாதம் புத்தரின் தர்ம உபதேச கொள்கைகளையும், கோட்பாடுகளையும் குழிதோண்டிப் புதைத்து விட்டே நாட்டின் நடைமுறைச் சட்டங்களுக்கு எதிராக சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்பு மனநிலையினின்று துணிச்சலோடு இதனைக் கட்டி எழுப்பியுள்ளது. இதற்கு எதிராக உண்மையான சமயத் தலைமைத்துவங்கள் இனம், மொழி, சமயம் கடந்து நீதியுடன் குரல் எழுப்ப வேண்டிய காலம் இது.

ஓர் இனத்தை ஒடுக்கவும், அவர்களின் இருப்பை அழிக்கவும், அரசியல் அபிலாசைகளையும் எதிர்பார்ப்பையும் சிதைக்கவும் எந்த ஒரு சமயமும் தம் அடையாளங்களை பாவிப்பதையும், ஆக்கிரமிப்புக்காக நிறுவுவதையும் அங்கீகரிக்க முடியாது. அது எந்த வடிவில் நிகழ்ந்தாலும் அதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பு - தார்மீகக் கடமை - ஆன்மீகத் தலைமைகளுக்கு உண்டு. கடந்த கால தவறுகளில் தொடர்ந்து இருக்காது சமய தலைமைகள் தம் அமைப்பு சார்ந்தும், தனித்தனியாகவும் கூட்டாகவும் இறைநீதியை வெளிப்படுத்த ஒன்றிணைய வேண்டும்.

தற்போதைய தேசிய மக்கள் சக்தியும் நாட்டின் ஜனாதிபதியும் கிளீன் ஸ்ரீலங்கா (தூய்மையான இலங்கை) தொடர்பில் அதிகம் பேசுகின்ற கலாசாரமாகியுள்ளது. வரவேற்கத் தக்கது. ஆனால் அது லஞ்சம், ஊழல், அரச சொத்துக்கள் கொள்ளையிடல் மற்றும் குப்பை கூளங்கள் தொடர்பாக மட்டும் இருக்கக் கூடாது. அரச பயங்கரவாதத்தையும் அதன் இன சமய கலாச்சார ஆக்கிரமிப்பு அழிப்பு என்பவற்றையும் சிங்கள, பௌத்த ஆதிக்க வாதத்தையும் தடுத்து நிறுத்துவதும் கிளீன் சிறிலங்காவுக்குள் உள்ளடக்குதல் வேண்டும். இதற்கும் சமய தலைமைத்துவங்கள் ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுத்தல் வேண்டும். இதன் மூலமே நாட்டின் நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்ப முடியும். சமயத்தை காக்கவும் முடியும். அரசியல் நீதி இல்லாதவிடத்து அதற்கு எதிராகக் குரல் கொடுக்க முடியாவிடில் சமயம் வாழாது, வளராது என்பதையும் நினைவில் கொள்வோம். - என்றார்.

# நெருக்கடிக் காலத்திலும் சிறப்பாக ஊடகப் பணியைப் புரிந்தவர் பாரதி

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அனுதாபம்

நெருக்கடி மிக்க யுத்த சூழ்நிலையிலும், அதன் பின்னரும் இலங்கையில் தமிழ் செய்தி ஊடகத்துறையில் ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்து வந்த மூத்த பத்திரிகை ஆசிரியர் ஆர். பாரதியின் மறைவு ஆழ்ந்த கவலையளிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அனுதாபம் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கோட்பாட்டளவில் இடதுசாரிப் பின்புலத்தைக் கொண்டிருந்த ராஜநாயகம் ஆசிரியரின் புதல்வர்களில் ஒருவராக திருநெல்வேலியில் பிறந்த பாரதி, இளம் வயதில் இருந்தே ஊடகத்துறையில் அதிக ஈடுபாடு காட்டி வந்திருக்கின்றார்.

ஆரம்பத்தில், வடக்கிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளில் பணியாற்றித் தம்மை ஊடகத் துறையில் புடம் போட்டுக் கொண்ட அவர், பின்னர் கொழும்பில் பிரபல தமிழ் பத்திரிகைகள் இரண்டில் பணியாற்றிய காலத்தில் இணையத்தளத்திலும் அவரது பங்களிப்பு இருந்து வந்தது. பிந்திய காலத்தில் மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்துகொண்டு ஊடகப் பணியைத் தொடர்ந்தார். புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் மத்தியிலும் அவரது எழுத்துக்கள் செல்வாக்குச் செலுத்தின.

மிகவும் அமைதியான சுபாவத்தைக் கொண்டிருந்த பாரதி, எங்களுடன் இனிமையாகப் பழகிய ஒருவர். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது துணைவியார் தேவகி, மற்றும் கனடாவில் வசிக்கும் மகன் பார்த்தீபன் ஆகியோருக்கும், உறவினர்களுக்கும், அன்னாரின் நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் நிலைமை ஆளுங்கட்சியினர் நேற்று நேரில் சென்று ஆராய்வு









**(கி.வசந்தன்)**

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் நிலைமை தொடர்பில் பிரதி அமைச்சர் மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுய் நேரில் சென்று அவதானம் செலுத்தியுள்ளனர்.

வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட தர்மபால வித்தியாலயம், சிறி சுமண மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும்,

நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம், அல் இக்பால் மகாவித்தியாலயம், பாவற்குளம் மகாவித்தியாலயம், அல் அமீன் மகாவித்தியாலயம், வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தியாலயம் ஆகியவற்றுக்கு ஆளும் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனும் விஜயம் செய்திருந்தனர். இவர்களுடன் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தனும் சென்றிருந்தார்.

இதன்போது பாடசாலை அதிபர், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி பாடசாலைகளின் தேவைப்பாடுகள், பௌதீக மற்றும் ஆளணி வளம் தொடர்பிலும் மாணவர்களது பிரச்சினைகள், ஆசிரியர்களது பிரச்சுனைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், பாடசாலை வளாகம், அதன் சூழல், மலசலகூட வசதி மற்றும் குடிதண்ணீர் வசதி என்பன தொடர்பாக நேரடியாக அவதானிக்கப்பட்டதுடன், அங்கு காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

பாடசாலைகளை பார்வையிட்ட பின், புதிய வரவு - செலவுத் திட்டம் மற்றும் விசேட ஒதுக்கீடுகள் மூலம் இந்த பாடசாலைகளில் இனங்காணப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், தேவையான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்திருந்தார்.

# மன்னார் நீதிமன்றின் முன் நடந்த சூட்டுச் சம்பவம் கைதான ஏழு பேரும் தொடர்ந்து விளக்கமறியலில்



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்பாகன் கைது செய்யப்பட்ட ஏழு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

7 சந்தேக நபர்களில் ஏற்கனவே 5 சந்தேக நபர்கள் அடையாள அணி வகுப்பிற்கு முற்படுத்தப்பட்டிருந்தனர்

ஏனைய இரு சந்தேக நபர்களுக்குமான ஆள் அடையாள அணிவகுப்புகள் நேற்றைய தினம் இடம்பெற இருந்த நிலையில் அடையாளத்தைக் காண்பிப்பதற்காக வருகை தர இருந்த இருவரும் நேற்று மன்றில் முன்னிலையாகவில்லை.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் குறித்த 7 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்தக் கொலை தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றத்தடுப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் முன்னெடுத்து வருகின்றனர் என்ச் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் நீதிமன்றத்தில் கடந்த 16 ஆம் திகதி வழக்கு விசாரணை ஒன்றிற்காக வருகை தந்தவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்தமையோடு பெண் ஒருவர் உள்ளடங்கலாக் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கையின் போது பிரதான சந்தேக நபர்கள் உட்பட 7 பேரை மன்னார் பொலிஸார் கைது செய்தனர்.அவர்களில் இராணுவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் அடங்குகின்றனர்.

அந்த 7 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

# 18 கிலோ கேரளக் கஞ்சாவுடன் சாய்ந்தமருதில் ஒருவர் கைது!

## விசேட அதிரடிப் படையினர் நடவடிக்கை

(கே.எ.ஹமீட், தில்சாத் பர்வீஸ்)

சாய்ந்தமருதில்18 கிலோ 169 கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் – சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை வேளையில் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளினால் கடந்த 4ஆம் திகதி கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் இருவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில், சாய்ந்தமருதில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போது 33 வயது மதிக்கத்தக்க ஒருவரின் வீட்டைச் சோதனை செய்த வேளையில், கட்டிலின் கீழ் பகுதியில் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகத்தின் பேரில் வீட்டு உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.



வீட்டில் இருந்து 18 கிலோகிராம் 169 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

இந்தக் கைது நடவடிக்கை, கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வவுனியா வடக்கில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி தேர்தலில் போட்டியிடும்

## சிவசக்தி ஆனந்தன் கூறுகின்றார்

(கி.வசந்தன்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ்க் கட்சிகள் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக அதன் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுமக்களின் ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் கேட்டறிந்து மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்ற வேட்பாளர்களை இனம்கண்டு களம் இறக்குவது தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம்.

அந்தவகையில், வவுனியா வடக்குப் பிரதேச சபைக்காக ஏனைய தமிழ்க் கட்சிகளோடு இணைந்து போட்டியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த பகுதியில் நீண்ட காலமாக இடம்பெறும் சிங்களக் குடியேற்றம், பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளால் அதன் இனவிகிதாசாரத்தில் பாரிய மாற்றம் ஏற்படும் நிலைமை உள்ளது.





எனவே, தமிழரசுக்கட்சி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியோடும் பேசி அங்கு இணைந்து போட்டியிட முடியுமா என்பது தொடர்பாக கலந்துரையாடவுள்ளோம்.

கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் போல இந்த தேர்தல் அமையாது. ஏனெனில் தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் திணறுகின்ற நிலைமையை அவதானிக்கிறோம். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த பெரும்பாலான தமிழ் மக்கள் இன்று வருத்தப்படுகின்ற நிலையைக் காண்கின்றோம்.

எனவே, உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை தேர்தல்களில் தமிழ் மக்கள் சரியான முடிவை எடுக்க வேண்டும். எமது பிரதேசத்தில் நாங்களே ஆளுமை செய்ய வேண்டிய நிலமையை உருவாக்க வேண்டும். அந்தவகையில் பலமான கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் கரங்களை பலப்படுத்த வேண்டியது வட-கிழக்கு தமிழ் மக்களின் கடமையாக இருக்கிறது. – எனத் தெரிவித்தார்.



# இலங்கை, இந்திய மீனவர் விவகாரம் இந்திய நாடாளுமன்றில் பிரேரணை



14 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தமை தொடர்பில் விவாதிப்பதற்காக இந்தியத் தேசிய காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் நேற்று இந்திய நாடாளுமன்றில் ஒத்திவைப்பு வேளை பிரேரணையொன்றை முன்வைத்தார்.

இந்த பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய அவர், கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை உடனடியாக விடுவிப்பதற்கும், அவர்களின் படகுகளைத் திருப்பி அனுப்புவதற்கு இலங்கைக்கு இந்திய அரசாங்கம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கோரினார்.

அத்துடன், சர்ச்சைக்குரிய கடற்பகுதிகளில் செயல்படும் இந்திய மீனவர்கள் தொடர்பான கண்காணிப்பு மற்றும் ஆதரவு அதிகரிக்கப்பட வேண்டும் எனவும், நீண்டகால தீர்வு காணப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் இந்தியத் தேசிய காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் வலியுறுத்தியுள்ளார்.

# டொனால்ட் ட்ரம்ப்பை சந்திப்பதற்கு முன்னதாக கட்டண குறைப்பு தொடர்பில் மோடி அவதானம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை சந்திப்பதற்கு முன்னதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்கா மீதான மேலதிக கட்டண குறைப்பு தொடர்பான திட்டங்களை தயாரித்து வருவதாக இந்திய அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்மூலம் இந்தியாவுக்கான அமெரிக்க ஏற்றுமதி அதிகரிக்கும் எனவும், இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக போர் தவிர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

டொனால்ட் ட்ரம்ப் பல நாடுகள் மீது அதிக வரியை விதிக்க திட்டமிட்டுள்ளார்.

இந்தநிலையில், எதிர்வரும் நாள்களில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவிற்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்திக்கவுள்ளார்.



அமெரிக்காவிற்கு ஆதரவாக உலகளாவிய வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# உலகின் மிகப்பெரிய போக்குவரத்து நெரிசல் இந்தியாவின் மகா கும்பமேளாவில் பதிவு



உலகின் மிகப்பெரிய போக்குவரத்து நெரிசல் இந்தியாவில் பதிவாகியுள்ளது.

இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் மகா கும்பமேளாவுக்காக ஆயிரக்கணக்கானோர் பயணம் செய்த நிலையில், இந்த போக்குவரத்து நெரிசல் நேற்று முன்தினம் ஏற்பட்டது.

200-300 கிலோ மீற்றர் தூரம் ஏற்பட்ட பெரும் போக்குவரத்து நெரிசல் வாகனப் போக்குவரத்தை ஸ்தம்பிக்க வைத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட நெரிசல் காரணமாக, பல மாவட்டங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகப் பயணிகள் பல மணிநேரம் அசௌகரியத்திற்கு முகங்கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.





# குவாத்தமாலாவில் பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து 30 பேர் உயிரிழப்பு

மத்திய அமெரிக்காவில் உள்ள குவாத்தமாலா நாட்டின் புறநகர்ப் பகுதியில் ஏற்பட்ட பஸ் விபத்தில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் பலர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

பயணிகள் பஸ் ஒன்று பாலத்திலிருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தையடுத்து குவாத்தமாலா நாட்டின் ஜனாதிபதி பெர்னார்டோ அரேவலோ, மூன்று நாள்கள் தேசியத் துக்கத்தை அறிவித்துள்ளார்.

இதேவேளை, விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




# 5 வீதமான ஊழியர்களை பணிநீக்குகிறது ‘மெட்டா’

மெட்டா நிறுவனம் மீண்டும் பெரிய அளவில் பணி நீக்கம் செய்யத் தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி மார்க் சக்கர்பர்க் தலைமையிலான அந்நிறுவனம் அடுத்த வாரம் 3,600 ஊழியர்களை பணி நீக்கம் செய்யத் தயாராகி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிறுவனம் சமீபத்தில் குறைந்த செயல்திறன் கொண்டவர்களில் 5 சதவீதமான ஊழியர்களை பணிநீக்கம் செய்வதாக அறிவித்தது.

இது தொடர்பில் வெளியான அறிக்கையின்படி, அமெரிக்கா உட்பட பல நாடுகளில் பணிநீக்க செயல்முறையை தொடங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளில் பணிநீக்கங்கள் இருக்காது என்று கூறப்படுகிறது.

பணிநீக்கங்கள் இருந்தபோதிலும், மெட்டா நிறுவனம் தனது ஊழியர்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் இயந்திர கற்றல் பொறியாளர்களை பணியமர்த்தும் செயல் முறையை விரைவுபடுத்தப் போவதாகக் கூறியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 11.02.2025




உங்கள் மனதில் உணர்ச்சி பூர்வமான எண்ணங்கள் ஓடும். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மேற்கொள்வதன் மூலம் உங்கள் பதற்றத்தைக் குறைக்கலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். கூடுதல் பணிகள் உங்களுக்கு சுமையாக தெரியும். உங்களை நிரூபிக்க நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்பட நட்பான அணுகுமுறை மற்றும் மனம் திறந்த பேச்சு அவசியம்.

அதிக பொறுப்புகள் காரணமாக தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்குக் கவலையை ஏற்படுத்தும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று அமைதியும் திருப்தியும் காணப்படும்.

உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது உங்கள் தனித் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் தரமான நேரத்தை செலவு செய்வீர்கள். உங்கள் துணையை உங்கள் நண்பர் வீட்டுக்கு அழைத்துச் செல்வீர்கள். இது உங்கள் இருவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு அதிகமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் முழுமையாக இருக்கும்.




இன்று நற்பலன்கள் காண்பதற்கு சாதகமான நாள். கடினமான சூழ்நிலையையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்களின் தன்னம்பிக்கை மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் உங்கள் பணிகளை சிறப்பாக மேற்கொள்வீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை ஒழுங்கு முறையுடன் மேற்கொள்வீர்கள். நீங்கள் எளிதில் உயர்நிலை அடைவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே அன்பு காணப்படும். இருவரும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள். இனிமையான தருணங்களை ஒன்றாகப் பகிர்ந்து கொள்வீர்கள்.

நீங்கள் பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்யலாம். நீங்கள் இன்று லாபம் அடையும் நாள்.




உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றி காண மாட்டீர்கள். புதிய விஷயங்களைக் கற்று வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும் உங்கள் முயற்சிகள் வீணாகும். பொறுமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் இனிமையான சூழ்நிலை இருக்காது. நிலுவைப் பணிகள் உங்களுக்கு கவலை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு எழும்.

நிதி வளர்ச்சிக்கு இது சாதகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளின் நலனுக்காக செலவு செய்ய நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக இன்று அமைதியின்மை காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்றைய செயல்கள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் அன்றாட செயல்களில் கவனம் தேவை. பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க உரையாடுவதற்கு முன் யோசித்து செயல்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஆறுதல் அளிக்கும்.

சக பணியாளர்களை கையாள்வது கடினமாக உணர்வீர்கள். அவர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்வார்கள். நீங்கள் பொறுமையாக நிலைமையைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு மேற்கொள்வீர்கள். நீங்கள் அவரிடம் எதிர்மறை உணர்வுகளை வெளிப்படுத்தாதீர்கள்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும்.




இன்று நற்பலனகள் கூடுதலாக கிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

உங்கள் கடின உழைப்புக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.




இன்று அதிர்ஷ்டம் அதிக அளவு காணப்படும். நீங்கள் எந்தச் செயலை செய்தாலும் அதனை முழுமையாகச் செய்வீர்கள். உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக வெற்றி காண்பீர்கள்.

புதிய வேலை வாய்ப்புகள் காணப்படும். வெற்றி காண நீங்கள் இத்தகைய வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்தில் சுப விஷயங்கள் நடைபெறும். நீங்கள் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள்துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்கள் கடின உழைப்பு காரணமாக இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நேர்மறை அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் வெற்றி காணக் கடுமையாக போராட வேண்டும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாக இருக்க வேண்டும்.

பண வரவு அதிகமாக காணப்படாது. உங்கள் சேமிப்பு அதிகரிக்கவும் குறைந்த வாய்ப்பே காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.02.2025




இன்று மந்த நிலை காணப்படும். மனக் குழப்பங்கள் காணப்படும். பாதகமான விளைவுகள் ஏற்படாமல் தவிர்க்க கவனமாக செயலாற்ற வேண்டும். இன்றைய சவால்களை சந்திக்க மிகவும் பொறுமை அவசியம்.

உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வதில் ஏமாற்றங்களோ அல்லது தடைகளோ காணப்படும். சக பணியாளர்களுடன் தொடர்பு கொள்வதிலும் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

இன்று சில செலவுகள் நேரலாம். அவை தவிர்க்க முடியாததாக இருக்கும்.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறப்பாக ஆக்கிக் கொள்ளலாம். புதிய மனிதர்களின் சந்திப்பு மற்றும் தொடர்புக்கு வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் கண்ணோட்டம் விரிவடையும்.

இன்று நீங்கள் பல பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். இதனால் பணிகள் அதிகமாக இருக்கும். இந்த நிலைமையை நீங்கள் திறமையாக சமாளிக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு அல்லது வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையுடன் நல்லிணக்கம் பராமரிக்க நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண விஷயத்தில் இன்று அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.




இன்று அபாரமான வாய்ப்பு காணப்படுகின்றது. உங்கள் இலக்குகளை எளிதில் அடைவதற்கான தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் இலக்குகளை குறுகிய நேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வு காணப்படும். ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள உகந்த தருணம்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு போதியதாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்று மனதில் பதற்றம் காணப்படும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம். பிரச்சினைகளைச் சமாளிக்கலாம். வாக்குவாதங்களைத் தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளைத் திறமையாகக் கையாள கவனமுடன் பணியாற்ற வேண்டும். உங்கள் அலுவலகப் பணிகளை மேற்கொள்ளும் போது பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வோடு பேச வேண்டும். உறவைப் பாதிக்கும் தேவையில்லாத விஷயங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்புக்கான சாத்தியம் உள்ளது. அதிகரிக்கும் செலவுகளை தவிர்க்க இயலாது.

# வவுனியாவில் குளவி கொட்டியதில் 9 பேர் வைத்தியசாலையில் அனுமதி

**(கி.வசந்தன்)**

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் குளவி கொட்டியதில் 9 பேர் பாதிக்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வீதியில் பலர் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரெனக் கூட்டமாக பறந்து வந்த குளவிகள் அவர்களைக் கொட்டியுள்ளன.



இரண்டு சிறுவர்கள் உட்பட 9 பேர் குளவிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

# வவுனியாவில் மாணவனின் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல்!

## பொலிஸாரின் அசமந்தமே காரணம் என விசனம்

**(வவுனியா நிருபர்)**

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் போதை ஆசாமிகள் உயர்தர வகுப்பு மாணவன் மீது கண்ணாடித் துண்டுகளால் வெட்டியதில் மாணவன் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்படடுள்ளான்.

நேற்று மாலை வைரவபுளியங்குளத்தில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் கற்றல் செயற்பாட்டை முடித்து வீதியால் சென்று கொண்டிருந்த உயர்தர வகுப்பு மாணவன் மீது வைரவபுளியங்குளத்தில் வழமையாக கூடி நிற்கும் போதைக்கு அடிமையான இளைஞர்கள் குழு கண்ணாடி துண்டுகளால் வெட்டியுள்ளனர்.

இதன் காரணமாக மாணவன் காயம் அடைந்த நிலையில் அங்கு நின்றவர்களால் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை அளிப்பதற்காக பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டான்.

போதை ஆசாமிகள் தாக்குதலை நடத்தி விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக போதைக்கு அடிமையான இளைஞர்கள் குழு அப்பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் கற்றல் செயற்பாட்டை முடித்து வரும் மாணவர்கள் மீது தாக்குதலை நடத்துவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் வவுனியா பொலிஸாரும், தற்போதைய மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் அசமந்தமாக இருக்கின்றனர் எனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.